குயில்

பதிவெண் : எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி. 9-9-58 செவ்வாய் | இசை: 15

துணைவர் இலக்கணம்

மாலை ஏழு மணிக்கு வெள்ளையன்
வேலை யாக வெளியிற் சென்றவன்
மிதிபறக்க மிதி வண்டி பறக்க,
அதிவி ரைவாய் வீட்டை அடைந்து
கிள்ளையே கிள்ளையே கேள்செய்தி என்று
துள்ளிய வண்ணம் சொல்ல லானான்:
அழகரும் அம்மையும் மூன்று மக்களும்
காற்றுக் குக்கடற் கரையில் இருந்தனர்
ஏழரை மணிக்கெலாம் இங்கு வருவார்.
எட்டு மணிக்கெலாம் புகைவண்டி ஏறி
ஊருக்குப் போவதாய் உரைத்தனர் அவர்கள்
இங்குண வுண்பதாய் ஏற்றுக் கொண்டனர்
எங்கே எழுந்திரு! சரியாய் இடையில்
அரைமணி தானுண்டு – அதற்குள் சமையல்
முடிய வேண்டும் இந்தா மூன்றுகுடம்
தண்ணீர், குண்டான், தட்டு முட்டுகள்
என்றே எதிரில் வைத்தான்! கிள்ளை
சின்னபடி ஒன்றரை கழுவிச் சேர்த்தே
வெள்ளையன் மூட்டிய அடுப்பின் மேல்உள
பானையில் இட்டு, வற்றற் பானையும்,
எண்ணெயும் புளியும் உப்பும் இட்ட
சட்டியும் வட்டிலும் தான்தொட் டிருக்கையில்
மிளகாய்த் தூள்மேல் வெள்ளையன் ஒட்டிய
குழவி குருகுரு வென்றது! குழம்பு
சோற்றை இறக்கிய அடுப்புமேல் சொளசொள
என்றே வற்றல் நன்று மணக்கக்
கொதித்தது! கிள்ளைகை கொத்த வரையையும்,
வெள்ளை யன்கை வெண்டைக் காயையும்,
ஆய்ந்தன குழம்பை அங்ஙனே இறக்கிப்
பொன்னெனக் கொத்தவரைப் பொரியல்
[இறக்குமுன்
வெள்ளையன் வாழை இலையினை வெடுக்கென
அறுத்துத் திருத்திக் கழுவிஅப் படியே
கூடம் பெருக்கிக் கூடப் பாய்இட்டு
நீடுசால் நிறைய நீர்நி றைத்துச்
செம்பும், துடைக்கத் துணியும் வைத்துத்
தன்னனு தான தான தானனு
என்று பாடிக் கொண்டே "என்ன"
என்று கூவினான். "எல்லாம் ஆயிற்று"
என்று மறுமொழி எழுப்பினாள் கிள்ளை
மணிப்பொறி டிங்கென ஏழரை வகுத்தது
நடுக்கட் டினிலே நாற்கா லிகளும்
விரிப்புப் பெட்டிமேல் வெற்றிலைத் தட்டும்
அழகின் சிரிப்பென அமைத்து முடித்து
வெள்ளையன் கைகூப்பி வேண்டக் கிள்ளைவாய்
மலர்தூய் வருக வருக என்ன
அழகர் வந்தார் அம்மை வந்தாள்
மழலை பேசி மக்கள் வந்தனர்
இருக்கை காட்ட இருந்தனர். உங்கள்
சிரிக்கும் சிறுவர் எங்கென்று கேட்க
வீட்டுப் பாடம் விரும்பி அங்கொரு
வீட்டுக் கேகினர் என்றது கேட்டுக்

கைய லம்பத் திரும்பினர் கண்டனர்
இருகையில் தண்ணீர் ஏந்தி நிற்கும்
தமிழ்ச்செல் வத்தைப். பாண்டியப் பையனை !
வாழ்த்தினர் வியந்தனர் செம்புநீர் வாங்கிக்
கைகால் முகம்கழீஇக் கடிதிற் சென்றே
எட்டுமணி கிட்டிற் றெனஉட் கார்ந்தனர்
ஐவர்க்கு நால்வர் அருந்தொண் டாற்ற
விருந்துண்டு வெற்றிலை கைக்கொண்டுதெருவில்
வந்தனர். மாட்டு வண்டி வந்தது
வணக்கம் வாழ்த்து நன்றி வழங்கச்
சலசலச் சலங்கை மாடுகள் சரேலென
விரைந்தன. வெள்ளையன் உடன்வி ரைந்தான்
புகைச்சல் வண்டி போனதோ கிடைத்ததோ
என்று கிள்ளை வீட்டுக் கேகினள்.
இரண்டு கடிகை ஏகின! அந்தப்
புகைவண் டியது 'பூ'வென் றூதிற்று
வெள்ளையன் கிள்ளையே என்றழைத் தபடி
வண்டி கிடைத்ததே வண்டி கிடைத்ததே
அரைமணி அளவில் சோறுகறி ஆக்கிய
உன்றன் திறமை உவமை யிலாதது
என்றான் வெள்ளையன்; கிள்ளை இசைப்பாள்
ஆடவர் உலகே ஆடவர் உலகே
எனக்கென் துணைவர் போலநின்
மனைமார்க்கு நீதுணை புரிந்து வாழ்கவே.

விற்பனையாளர்

இல்லாத இடங்களில்...

குயில் இதழைப் பெற
விரும்புவோர்
உறுப்பினராகச் சேர்ந்துகொள்க.
விற்பனைசெய்ய விரும்புவோர்
எழுதுக.

விற்பனையாளர்கட்கு

முன் இதழ்கட்குரிய தொகையை இது வரையனுப்பாத விற்பனையாளர்கள் உடன் அனுப்பிவைக்க.

பணமனுப்பாதவர்க்கு அடுத்த கிழமை முதல் இதழ்கள் நிறுத்தப்படும்.

ஒற்றுமைதான் வழி

நல்ல வழிஇது நல்ல வழிஇது
சொல்லுவதைக் கேளீர்
கொல்லை வழியல்ல கோணல் வழியல்ல
சொல்லுவதைக் கேளீர்

தொல்லை யடைந்தீர் சோற்றுக் கலைந்தீர்
நெல்லிக்காய் மூட்டை யைப்போல்
எல்லையில் லாத பிரிவினை நோக்கி
ஒற்றுமை கொள்வீரே
நல்லவழி இது!

சாதிக் கிணற்றில் சமையச் சேற்றில்
தள்ளப்பட் டேஅழிந்தீர்
ஓதும் பெரியார் உள்ளம் உணர்ந்தே
ஒற்றுமை கொள்வீரே
நல்ல வழிஇது!

ஆண்டுக்கு நூறு கோடிஇ ழந்தோம்
அடிமைப் பட்டதினால்
தூண்டிலில் மீனாய்த் துடிது டித்தோம்
நாட்டை விட்டதினால்

நாலு கோடிமக்கள் மற்றவர் காலடி
நத்திப் பிழைப்ப துண்டோ?
ஓலை விடுப்பீர் நம்பகை ஓட
ஒற்றுமை கொள்வீரே

நிலை கெட்டுவந்த வடக்கரையே
நேருவாட்சி காக்கும்
நிலை கெட்டுவந்த தமிழர்களைப்
பாடைகட்டித் தூக்கும்

படிஅரிசிக்குப் பறக்கையில் பத்த
வச்சலம் சிரிக்கின்றார்
அடியோடு கேரளம் ஏற்றிக்
கையை விரிக்கின்றார்

முத்தான மொழி முன்னோ ரின்மொழி
முத்தமிழர் சொன்னதாம்
எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்
என்னும் அருள் மொழியே
நல்ல வழிஇது!

புதுச்சேரி, தி. வ. ஆ ௧௯௮௯ ஆவணி ௨௪.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் IV

சட்டர்ஜி கூட்டம் நீக்கப்பட வேண்டும்.

தில்லி ஆட்சியாளர்களால் - நேருவால், தமிழர் வாழ்வு எல்லா வகையாலும் கெடுக்கப் படுகின்றது. அதற்குக் காரணம் தமிழர் விடுதலை கோருகின்றார்கள் என்பதாகும்.

தமிழரின் இந்த எண்ணம் இன்று நேற்றுத் தோன்றியதில்லை. ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளின் முன்னே தோன்றியதாகும். பெரியார் அஞ்சாது கூறினார் அன்றே! அன்று தொடங்கி அஞ்சாது தொண்டாற்றி வருகின்றார் இன்றுவரைக்கும். அத்தொண்டு நாளுக்கு நாள் பயன்தரத்தக்க நிலையடைந்து வருவதையும் தில்லிக்காரர் பார்த்து வருகின்றார்கள். முதன் முதலில்-இந்த இராசாசி முதல்வராக இருந்த காலத்திலேயே இந்தியைக் கொணர்ந்து அவர் பட்டபாடு எச்சிலைக்கு அலையும் நாயும் பட்டிராது. அன்று கிளர்ந்தெழுந்த மக்களின் தோற்றம் கடலினும் பெரியதாயிருந்தது. அப்போது நடந்த ஒரு கதையும் நினைவுக்கு வருகின்றது. இராசாசி மறைமலையடிகளுக்கு ஆளனுப்பினார் அவரைச் சரிக்கட்ட! அவர் இந்தியை எதிர்க்காதிருக்க! யாரை அனுப்பினார் தெரியுமா? இதே கூலி, இதே மீனாக்கி அழகைத் தான்! மீனாக்கி அழகு மறைமலையடிகளிடம் வந்து என்ன சொல்லி யழுதது தெரியுமா?- திங்கள் ஒன்றுக்கு ஐந்நூறு வெண் பொற்காசு வருமானத்தில், ஓர் அலுவல் தருவார் ஆச்சாரியார். நீங்கள் இந்தியை எதிர்க்காதீர்கள்! என்றார். கான்றுமிழ்ந்து துரத்தினார் அடிகள்.

தில்லிக்காரர் இந்தியைப் புகுத்த வந்தனர். பெரியார் கொடி எரிப்பால் எதிர்த்தனர். படுத்தனர் தில்லிக்காரர். மீண்டும் எழுந்தனர். காலடி வழியாகப் புகுத்துகின்றார்கள் இந்திப் பாம்பை.

இது மட்டுமன்று. சமக்கிருதத்தை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பவேண்டும் என்றும் கனவு காணுகின்றார்கள். வேலையும் சிறிய அளவில் தொடங்கியும் உள்ளனர்.

மற்றொரு வழி கண்டு பிடித்தார்கள். எவரிடம் தமிழர்கள் இருக்கின்றார்களோ, எவரிடம் தமிழ்நாடு கட்டுப்பட்டிருக்கின்றதோ அவரை- அந்தப் பெரியாரை ஒழித்துக்கட்டவுமான மற்ற வேலையெல்லாம் செய்தனர் – செய்து வருகின்றனர்.

அரிசியை எல்லாம் மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்து தமிழரைச் சாகடிக்கிறார்கள். மலையாளத்தினின்று அந்த அரிசி பாகித்தானுக்குப் போவது தெரிந்தும் பாகித்தான் வாழ்ந்தாலும் வாழ்ந்து போகட்டும் தமிழர் சாகட்டும் என்று எண்ணியிருக்கிறார்கள் தில்லிக்காரர். அதற்கு ஒத்துத் தாளம் போட்டுவர வேண்டிய நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள் சென்னை அமைச்சர்கள்.

ஈழத்துத் தமிழர்கள், நாடற்றவர் என்று கீழறுத்தார்கள் தில்லியினர்.

இன்னும் தமிழர்கள் ஒழிந்துபோகவில்லை, ஆழ்ந்து கருதினார்கள் தில்லியினர்.

தமிழின் மதிப்பைத் தொலைக்கவேண்டும். அது தொலைந்தால் தமிழர்களுக்குத் தமிழ்ப்பற்று ஒழியும். தமிழ்ப்பற்று ஒழியவே அவர்கள் உடலினின்று உயிர் ஒழியும். தமிழ்நாடு திறந்த வீடாகிவிடும். வேண்டிய அளவு கொள்ளையடிக்கலாம் என்ற கண்டுபிடிப்புக்குப் பின்புதான் திராவிட மொழியைக் கொலை செய்ய — அதன் மதிப்பைத் தொலைக்கக் கிளம்பினார்கள்.

தில்லிக்காரர் நம்புகிருர்கள். திராவிட மொழியாராய்ச்சிக் குழுவினரைக் கொண்டு இச் செயலில் வெற்றி பெறலாம் என்று. தில்லிக்காரர்கள் நம்புகிருர்கள் சட்டர்ஜியைக் கொண்டும் கூலி மீனுக்கி அழகைக் கொண்டும் கூலி சேதுப்பிள்ளையைக் கொண்டும் இதில் வெற்றி பெறலாம் என்று.

அவர்கள் நம்புவதற்கு மற்றுமொரு காரணம் உண்டு! இந்தத் திராவிட மொழியாராய்ச்சிக் குழுவில் டாக்டர் இராசமாணிக்கனரும் இருக்கிருர். டாக்டர் சிதம்பரநாதனும் இருக்கிருர். இவர்கள் தமிழருக்கு ஆதரவு காட்டி என்ன கிழித்துவிட்டார்கள். எலும்பு போடுவதாகத் தெரிந்தால் இவர்களும் கண் மூடி. வாய் வாளாது காட்டிக் கொடுக்காமலா போய் விடுவார்கள்?

இவ்வாறு எண்ணியும் ஊக்கம் அடையலாம் சட்டர்ஜி கூட்டம்!

இன்னும் அந்தக் குழுவில் தமிழ்ப்பற்று மிக்காராயிருக்கும் இராமநாதன் செட்டியாரும் இருக்கிருர். இவரும் தமிழை அழிப்பார்க்குத் தாளம் போடுகின்ருர் என்று எண்ணலாம் சட்டர்ஜி கூட்டம்.

மீண்டும் எச்சரிக்கை முறையில் இளவரசர் முத்தையா அவர்கட்கு விண்ணப்பிக்கின்ருேம்.

உடனே இந்தக்குழுவிலிருந்து, சட்டர்ஜி. தெ. பொ. மீ. சேது ஆகியோர்களைப் பிடர் பிடித்து வெளியில் தள்ள ஆவன செய்ய வேண்டும்.

கப்பலேறிச் சென்றுள்ள நாராயணசாமிப் பிள்ளை திரும்பிவந்தால், தமிழ் ஒழிப்பு வேலைக்கு எந்த வகையிலும் ஆதரவு கொடுக்காமல் திருந்திப் பிழைக்கும்படி செய்யவேண்டும்.

டாக்டர் இராசமாணிக்கனருக்கும் ஒரு வேண்டுகோள்: ஆளுக்குத் தக்கபடி வளைந்து கொடுக்கும் வேலை வேண்டாம்.

டாக்டர் சிதம்பரநாதன் அவர்கட்கு விண்ணப்பம்: நீங்கள் தமிழுக்கு - வாளைத் தூக்கிப் போர் செய்யவேண்டாம். தமிழுக்குத் தீமை செய்வாரை ஓட்டிப் போகக்கூடாது.

இராமநாதன் செட்டியாரைக் கேட்டுக் கொள்ளுகின்ருேம்: சட்டர்ஜி கூட்டத்தை ஆதரிக்கவேண்டாம்.

உடனே, தமிழைத் தொலைக்கக் காப்புக் கட்டிக் கொண்டுள்ள இந்தக் கூட்டம் குழுவினின்று நீக்கப்படும் என்ற அறிகுறி ஏற்படாவிட்டால் நம் தொடக்கத் தாக்குதல் பொதுக் கூட்டக் கண்டனங்களேயாகும் என்பதைத் திருவாளர் முத்தையா அவர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

★

நன்றி!

கண்ணுக்குடியில் தோழர் இராசு, தோழியர் கமலா ஆகியோரது வாழ்க்கை ஒப்பந்தம் 20-8-58 புதன்கிழமை காலை 9-30 மணியளவில் இனிது நடைபெற்றது.

A. R. மாரிமுத்து M. L. A. அவர்கள் தலைமை ஏற்று விழாவை நடத்தி வைத்தார். தோழர், இரா. இளவரி வாழ்த்துரை கூறினர்.

அதுபோது மணமகள் வீட்டாரால் நம் குயில் வளர்ச்சிக்கு ஒருரூபாய் அன்பளிப்பாக வழங்கப் பெற்றது.

வரப்பெற்ருேம். நன்றி!

நேரு

நிலைகெட்ட பாகித்தான் மக்கட்கு நேரு
மலைஒத்த பொன்னை வழங்கி — நிலைகெட்
டிலங்கைவிட்டு வந்த தமிழர்களை எல்லாம்
கலங்கவிட்டார் கையை விரித்து.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

கற்பனை

இது கல்பனு என்ற வட சொல்லின் சிதைவு என்பார் வடவர். ஆம் என்பார் தமிழறியாத தமிழர் சிலர்.

கற்பனை, கல்பனுவின் சிதைவு என்பவர் விற்பனையை வில்பனு என்பதன் சிதைவு என்பார் போலும். நகைப்புக்கிடமாகின்றது.

கல்+பு=கற்பு அனைத்துமோர் முதல்நிலை என்க. இது கற்பனையின் முதனிலையாயிற்று. கற்பு+அன்+ஐ=கற்பனை என்க. அன் சாரியை. ஐ தொழிற்பெயர் இறுதி நிலை.

முதனிலையாகிய கற்பு என்பதன் பொருள் தோண்டுதல் என்பது. ஆகுபெயராய் தோண்டுதலின் பயன். எண்ணத்தின் ஊற்று. புதுப்புது கருத்துக்கள் என்க. எனவே கற்பனை தூய தமிழ்ச்சொல் என்பது வெட்டவெளிச்சம்.

கல்பனு என்பதொரு சொல் வடமொழியில் இருக்கலாம். அது தமிழில் கற்பனை என்றுதான் திரிக்கப்படும். திரிக்கப்படவே, நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்ன?-வடவர் சொல்லும் கற்பனைக்கும் தூய தமிழ்ச் சொல்லாகிய கற்பனைக்கும் தொடர்பில்லை, என்பதாகும்.

அன்றித் தமிழின் கற்பனையையே வடவர் எடுத்தாண்டார்கள் எனினும் பொருந்துவதே. இந்த உலகில் சமத்கிருதம், தமிழுக்குப் பிந்தியது என்பதும், சமத்கிருதக்காரர் தமிழர்கட்குப் பிந்திய நாகரிகம் உடையவர் என்பதும் மறத்தற்குரியன அல்ல.

வடிவு

இது, அம் சாரியை பெற்று வடிவம் என்றும் வரும். இச்சொல் வடசொல் என்று ஏமாற்ற வருவர். ஏமாறற்க.

வார்ப்படக்காரர் தொழிலிடத்தினின்று தோன்றிய பெயர்களில் ஒன்று. வடி+வு= வடிவு தொழிற்பெயர். தொழிலாகுபெயராக வடிவு செய்தலால் வரும் வடிவத்துக் காயிற்று. செம்பு முதலியவைகளைக் காய்ச்சி அச்சில் கசடு நீங்க வடித்தூற்றுதலின் ஆகும் வடிவம் எனக் காரணப் பெயராதல் காண்க. வார்ப்படம் என்பதும் இதே பொருளில் அமைந்த காரணப் பெயரே என ஒப்பு நோக்கித் தெளிக.

படிவு

இதுவும் அம்சாரியைபெற்றுப் படிவம்என வரும். இதையும் வடசொல் எனக் கதைப்பாரும் உளர்.

படிவு, படிதல் என்ற பொருளுடைய தொழிற்பெயரே இதுவும், அச்சுக்குப் பெயர். அச்சிற் படிவு செய்யப் பெற்ற வடிவப் பொருளுக்கு ஆகு பெயர்.

படிமம்-வடிவம், படிவம் ஆயினவெனக் கூறுவர் ஏமாற்றுக் காரர்கள். அதற்கு ஒத்து ஊதுவார்கள் மீனாக்கி அழகு, சேது ஆகிய பிள்ளைகள். படிவு தூய தமிழ்க் காரணப்பெயர் என முடிக்க.

நேரு ஆட்சி

"யாருளார் என்னைவிட" என்னும் மனப்பான்மை
நேருவிடம் காண்பதாய், நேருறவே — மோரார்சி
தேசாய் எனும்அமைச்சர் செப்பினர் இவ்வாட்சி
மாசாய் மறைவதன் முன்பு.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி எ. (தொடர்ச்சி)

பிசிராந்- போகட்டும். இன்னொன்று கேட்க விரும்புகின்றேன். தமிழனின் உயிர் தமிழே யாகும். தமிழிற் பற்றில்லாதவன் தமிழன் அல்லன். அவன் உயிருடையவனும் அல்லன். சோழ மன்னன் தமிழ் வளர்க்கும் பணியில் மனத் தளர்ச்சி அடைந்ததுண்டா?

உட்கார்ந் அப்படி ஒன்றுமில்லை.

பிசிராந்- போகட்டும். மற்றொன்று கேட்க விரும்புகின்றேன். ஆட்சித் துறைகள் ஆறு. அவை, உழவு, தொழில், வாணிகம், வரைவு, தச்சு, கல்வி என்பன. இந்த ஆறு துறைகளில் ஏதாவது அசைவற்றுப் போனதுண்டா? செவ்வனம் நடவாது போனதுண்டா?

உட்கார்ந்: அப்படி ஒன்றுமில்லை.

பிசிராந்: வேறு என்ன குறைபாடு கூறுகின்றீர் சோழ மன்னர்மேல்?

உட்கார்ந்: மூப்பின் வாய்ப்பட்ட மன்னர் தம்காப்புத் தொழிலில் கண்கெட்டு வருகின்றனரே என்றேன். அன்றியும் புலவரே, தலைக்குயர்ந்த பிள்ளைகள் இருக்கையில் அவர்கட்கு முடி சூட்டாமல் இவரே தொல்லையுற்று வருவதில் மக்கட்கு வெறுப்பு ஏற்படாதா என்று கேட்கின்றேன்.

பிசிராந்: இன்ன துறையில் கண்காணிப்பில்லாத காரணத்தால் இன்ன குற்றம் ஏற்பட்டது என்று கூறுங்கள்.

உட்கார்ந்: பாண்டிய நாட்டில் ஏற்பட்ட படுகொலைக்குச் சோழநாட்டின் தீய ஆட்சியே தான் காரணம் என்று கூறுகின்றேன்.

பிசிராந்: படுகொலையின் முடிவு தெரிந்துவிடவில்லை. சோழநாட்டானே இந்தக் கொலைக் குற்றம் புரிந்தான் என்று கூற முடிந்தாலும் சோழமன்னன் ஆட்சி மாசுபட்டுவிடாது. மாசுபட்டதாகச் சொல்லப்படலாம்.

(இந்த நேரத்தில் ஆலினின்று பறவை எச்சமிடுகின்றது. அது உட்கார்ந்திருப்பானின் துடைமேல் விழுந்ததால் அவன் முகம் சுருங்குகின்றது.)

பிசிராந்: நண்பரே, இது ஆலின் குற்றமன்று. அந்த ஆலின் நிழலில் அண்டிய பறவை செய்த குற்றம். ஆலைப் பாருங்கள்! அதன் வேரைப் பாருங்கள்! அடி மரத்தைப் பாருங்கள்! கிளை இலைகளைப் பாருங்கள்! அவை மாசற்றவை! இருந்தபடியே இருக்கின்றன. பறவை இழைத்த குற்றம் ஆலமரம் இழைத்த குற்றமன்று. இருக்கட்டும், மற்றொன்று கேட்க விரும்புகின்றேன் உங்களை! தமிழர் நிறை மனைவியின் கற்பை வைத்து நிறுக்கப்படும். தமிழ்நாட்டில் சோழமன்னர் மனைவியார் கற்புத் தவறியதுண்டோ?

உட்கார்ந்: *(சினத்துடன்)* என் அன்னையரா?

பிசிராந்: முகமூடியைக் கிழித்துக்கொண்டீர் இளவரசே! பண்பு வேறுபாட்டால் தந்தைக்கு மாசு ஏற்படுத்த முனைந்துவிட்டீர். ஆலின் மேலிருந்து எச்சமிடும் பறவைபோல! உங்கள் மனநிலை திருந்தவேண்டும் அல்லது பொறுத்திருக்கவேண்டும். குறைபாடுள்ளது உலகம். பல திருத்தங்களைப் பெறவேண்டும் அது. அதற்கான கருவூலம் உம் தந்தையார் சோழ மன்னர்.

இளவரசன்: புலவரே, நீங்கள் தூக்குமேடை நோக்கி வரவேண்டுமல்லவோ?

பிசிராந்: வருகின்றேன்.

இளவரசன்: அமைச்சரைக் காக்கவேண்டு மல்லவோ?

பிசிராந்: தீர்ப்பு அறத்தராசில் வைக்கப்பட்டு விட்டது. தீர்ப்புக் கூறுவோன் உரிமையில் தலையிட எவனுக்கும் உரிமையில்லை. தலையிடுவது இழிசெயலும் ஆகும்.

இளவரசன்: சோழநாட்டுக் கொலையாளிக்கு ஏற்ற தண்டனை ஏற்பாடு செய்வது பிழையா?

பிசிராந்: பிழையில்லாமல் வேறென்ன?

இளவரசன்: எது எப்படியிருப்பினும் அங்குப் போகலாம் வாருங்கள்.

பிசிராந்: நன்று போகலாம்.

(போகின்றார்கள்.)

காட்சி அ.

இடம்: *தூக்கு மேடை.*

காலம்: *தூக்கிவிடும் நேரம்.*

உறுப்பினர்: *அமைச்சன், அரசன், கொலையாளி, பிசிராந்தையார், மேற்படியார் பெருமக்கள், அமைச்சர் மனைவி அனிச்சை.*

காட்சித்தலைப்பு:

நானே கொலை செய்தேன்

நிகழ்ச்சி: *துன்பக் கேணியில் அனைவரும் ஆழ்ந்து கிடக்கின்றார்கள். என்ன தீர்ப்பு என்று ஆவல் கொள்ளுகிறார்கள்.*

அரசன்: பெருமக்களே! படுகொலை புரிந்ததாகக் கூறினான் கடுகளவு காரணமும் கூற மறுத்தான். இந்தப் படுகொலையின் உட்புறத்தில் கெடுதலையுள்ளங்கள் ஆயிரமிருக்கும். அவைகளைக் கண்டறிந்தால் களைகளை அடியோடு வெட்டியதாகும். நாடு மாசு நீங்கும். உளவை வெளிப்படுத்துவேன் என்ற அமைச்சர் அது செய்யவில்லை. கடன்பட்டவர் அக்கடனைக் கழிக்கவில்லை. தண்டனைக்காகக் காத்திருக்கிறார். கொலைக் காரணம் தெரிந்தவர்கள் இங்கிருந்தால் கூறி. அமைச்சரைக் காக்கலாம் இல்லை. இல்லையா? தூக்குக!

ஒரு குரல்: நானே கொலை செய்தேன்! தூக்கில் இடுக என்னை.

(ஓர் இளைஞன் மக்கள் கூட்டத்தைத் தாண்டித் தூக்கு மேடையை நோக்கி ஓடி வருகின்றான். கூட்டத்தில் வியப்பு.)

அரசன்: நீரோ கொலை செய்தீர்? ஏன் கொலை செய்தீர்? உமக்கும் இறந்த மங்கைக்கும் என்ன தொடர்பு? — பொது நலங்கருதி எல்லாவற்றையும் விளக்க வேண்டுகிறேன்.

இளைஞன்: எதையும் கூறவிரும்பவில்லை பொது நலங்கருதி!

அரசன்: இப்படிக் கூறினால் உம்மை எப்படித் தண்டிப்பது? முன்னர் அவர் சொன்னார் நானே கொலை செய்தேன் என்று.

இந்நாள் நீர் சொல்லுகின்றீர் நானே கொலை செய்தேன் என்று. இதுபோல் இன்னமும் - இருக்கக் கூடுமே! எதிர்வந்த உம் சொல்லிலும் பொய்ம்மை இருக்கக் கூடுமே! உண்மை விளக்கம் ஆகவேண்டாமா? இப்படியெல்லாம் நீண்டு கொண்டு போனால் நாம் அமைச்சரையல்லவா இழக்க நேருகின்றது!

பிசிராந்: அமைச்சருக்கு ஒன்றானால் அரசர் வாழமாட்டார்! அறுதியிட்டுக் கூறுகின்றேன். அரசருக்கு ஒன்று ஆனால் நான் உயிர்வாழேன். இதோ செத்துக் கொண்டிருக்கிறார்கள் அன்னை அனிச்சையார்.

அப்பரே. திரையை விலக்குங்கள். நடந்ததை - நீங்கள் கண்டதை அப்படியே நடத்துங்கள். நாடகத்துள் நாடகத்தை மக்கள் ஆவலாய் எதிர்பார்க்கின்றார்கள். பாவாணர்கள் பதைக்கின்றார்கள் பாட்டு எழுத!...

இளைஞன்: நான்மட்டும் நடந்ததைக் கூற முற்பட்டால் - கதை வரிசைப்பட்டுவராது. இதோ *(இதற்குமுன் நான்தான் கொலை செய்தேன் என்றவனைக் காட்டி)* இவரும் ஒத்துழைக்க வேண்டும்.

அவன்: பொதுநலம் கருதி.

(10 ஆம் பக்கம் பார்க்க)

கூட்டமுது

சிக்கி—முக்கி இரும்புத் துண்டில் மோதித் தீ உண்டாக்கும் ஒருவகைக் கல்லின் பெயர். இந்தப் பெயர் அக்கல் மோதுகையில் சிக்குமுக்கு என்ற ஒலி உண்டாவதால் வந்தது என்பர். இது தூய தமிழ்ச்சொல்! ஆனால் கலைமகளுக்கு இது தமிழ்ச்சொல் என்று சொல்ல மனம் ஒப்பவில்லை, சக் மக் என்ற உருதுச்சொல் இது என்கின்றது! சிக்கிமுக்கி என்றதை உருதுகாரர் சக் மக் என்றனர் என்றால் வரும் இழுக்கென்ன?

★ ★ ★

கொத்துதல் என்பது தான் குத்துதல் என்று திரிந்தது என்று கலைமகள் சொல்வது பிழை. கொத்துதல் வேறு குத்துதல் வேறு. கொந்துதல் என்பதின் வலித்தலே கொத்துதல் என்க.

★ ★ ★

கச்சியப்பர் என்ற புலவர் கூறுகின்றார்:

"பொங்குதமிழ் அயோத்திவாழ்
தசரதன்என் போனிடத்தும்
பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும்
வீரராகவர் இருவர்
தோன்றினு ரால்!
அங்கொருவன் ஒருகலைமான்
எய்திடப்போய் வசைபெற்றான்;
அவனி பாலன்
இங்கொருவன் பல்கலைமான்
எய்திடப்போய்க் கல்வியினால்
இசைபெற் றானே"

இதில், தசரதராமன் கலைமானை எய்திடப் போய் வசையே பெற்றான் என்று பாவாணர் கூறியது குறிப்பிடத் தக்கது.

★ ★ ★

கல்விக்கரசு மணவாளராமானுசனார் கட்டளை

அங்குவைத்தார் ஐந்துபல்கலைக்கழகம்
[தில்லியார்,
இங்குவைத்த தேதொன்றும் இல்லையன்றோ!
[- சிங்கக்
குணவாள ரேஎழுச்சி கொள்ளீரோ என்றார்
மணவாள ராமா னுசர்.

ஆண்டுக் கறுபது கோடியினைத் தில்லியார்
ஈண்டிருந் தேப்பமிட்டார் என்தமிழீர்
[- வேண்டாத்
தனலானார் வஞ்சத்தைத் தாக்குவீர் என்றார்
மணவாள ராமா னுசர்.

நல்ல மணவாள ராமா னுசனாரின்
சொல்லை யுணர்ந்து துடித்தெழுக - கல்விக்
கரசரவர்; நந்தமிழரின் அப்பனவர்; வெற்றி
முரசறைந்து முன்னேறு வீர்.

★

பிழை திருத்தம்

குயில் இசை 13–ல் வெளிவந்த பம்பாய் பிஷப்பாரே என்று தொடங்கும் வெண்பாவின் இரண்டாம் அடியில் - சிலபடிகளில் மட்டும் கரையுமென்றா என்பதற்குப் பதில் கரைபடியும் என்றிருப்பதைத் திருத்திக் கொள்க.

குயில் 14–ல் தென்னந்தோப்புப் பாட்டின் மூன்றும் அடியின் கடைசி வரியாக அடுப்பெரித்திட மட்டையும் கொடுக்கும் என்பதைச் சேர்த்துக் கொள்க.

பாட்டு எழுதுவார்க்குச் சில குறிப்புக்கள்

(க)

தன், தான் ஒருமைக்குரியவை.
தம் தாம் பன்மைக்குரியவை.

ஆதலால்,

அவன். என்பதனோடு தன் வரும் (அவன்றன்)
அவர் என்பதனோடு தம் வரும் (அவர்தம்)

அவ்வாறே

அவன் என்பதனோடு தான் வரும் (அவன்றான்)
அவர் என்பதனோடு தாம் வரும் (அவர்தாம்)

கீழே தரப்படும் அப்பர் செய்யுளை நோக்குக.

''ஒன்றி யிருந்து நினைமின்கள்
உந்தமக் கூனமில்லை.,

''என்றுவந்தாய் என்னும் எம்பெருமான்றன்.,

உம் பன்மை. தம் பன்மையாதலால் உடன் வந்தது. உம்+தம்=உந்தம்.

பெருமான்றன் என்பதில் பெருமான் ஒருமை. தன் ஒருமையாதலின் உடன் வந்தது. பெருமான்+தன்=பெருமான்றன்.

பாட்டு எழுதுவோர் பலர் உந்தன் என்றும் எந்தன் என்றும் எழுதுகின்றார்கள். உன்றன் என்றல்லவா எழுதவேண்டும். என்றன் என்றல்லவா எழுதவேண்டும்?

உந்தம் என்றால் பிழையில்லை. எந்தம் என்றால் பிழையில்லை. எம் பன்மை தம் பன்மை ஆதலின்.

சுக்கு, பேச்சு, பட்டு, முத்து, காப்பு' புற்று, என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்கள், ஏன்? ஈற்றயலெழுத்தைப் பாருங்கள், வல்லெழுத்தே இல்லையா?

சங்கு, பஞ்சு, பண்பு, பந்து, பாம்பு, அன்பு, என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் மென்றொடர்க் குற்றியலுகரச் சொற்கள். ஏன்? ஈற்றயல் மெல்லெழுத்து!

செய்து, சார்பு, சால்பு, போழ்து, தெள்கு. என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் இடைத் தொடர்க்குற்றியலுகரச் சொற்கள். ஏன்? ஈற்றயலெழுத்து இடையெழுத்து.

அஃது, இஃது, எஃது, இருபஃது, கஃசு, என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரங்கள். ஏன்? ஈற்றயல் எழுத்து ஆய்த எழுத்து.

சகடு, பிசகு, படகு, மதகு, ஒப்பாது, விறகு, பொழுது, பெரிது, சிறிது என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் உயிர்த் தொடர்க் குற்றியலுகரச் சொற்கள். ஏன்? ஈற்றயலில் உயிர் எழுத்து.

காசு, சாறு, நாடு, ஏது, ஈபு, ஆறு என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் நெடிற்றொடர்க் குற்றியலுகரங்கள். ஏன்? ஈற்றயலெழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள்.

ஈற்றயலெழுத்தென்றால் என்ன? சுக்கு என்பதன் ஈற்றெழுத்து கு அதன் அயலெழுத்து க்.

வல்லெழுத்து எவை? க், ச், ட், த், ப், ற், என்ற ஆறும்.

மெல்லெழுத்தென்றால் எவை? ங், ஞ், ண், ந், ம், ன், என்ற ஆறும்.

இடையெழுத்தென்றால் எவை? ய், ர், ல், வ், ழ், ள், என்ற ஆறும்.

ஆய்த எழுத்து: ஃ.

உயிர்த் தொடர்க்குற்றியலுகரம் என்பதில் உயிர் என்றது எதை? சகடு என்பதன் ஈற்றயல் எழுத்தாகிய க என்பதை. ஏன் எனில், க் என்ற தன் மேல் அ இருக்கிறதே அதைக் குறித்து.

நெடில் எவை? ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, என, அன்றியும் இவை ஏறியதால் உண்டான கா, கீ, கூ, கே, கோ, கௌ, முதலிய அனைத்தும் கொள்க.

இது வரைக்கும் சொல்லிய வற்றால் குற்றியலுகரம் இன்ன தென்று புரிந்தது.

இனி, அக் குற்றியலுகரச் சொல்லின் முன் வரும் உயிரெழுத்து எப்படியாகும் என்பது கூறப்படும்.

சுக்கு + அரிது = சுக்கரிது என்றாகும். சுக்கு என்றதன் ஈற்றிலுள்ளது கு, அதன் மேல் உள்ள உ மறைந்து விட்டது சுக் க். மீந்தது அதன் கடைசி க் மேல் வரும் அ ஏறிக் கொள்ளும். சுக்கரிது என்று ஆனது காண்க,

இதைத்தான் நன்னூல் "உயிர் வரின் உக் குறள் மெய் விட்டு ஓடும்" என்றது! எனவே,

சுக்கு + அரிது = சுக்கரிது. சுக்கு + ஆணம் = சுக்காணம். சுக்கு + இனிது = சுக்கினிது. சுக்கு + ஈவாய் = சுக்கீவாய்.

சங்கு + ஒலி = சங்கொலி. சங்கு + ஊதல் = சங்கூதல். செய்து + அளித்தார் = செய்தளித்தார். நாடு + அழகு = நாடழகு. நாடு + ஆண்டான் = நாடாண்டான். அஃது + ஏது = அஃதேது என்று புணரும்.

பாட்டெழுதுவார் பாட்டெழுதும்போது, சுக்கரிது என்று புணர்த்தே எழுதவேண்டும். சங்கொலி என்று கூட்டியே எழுதவேண்டும்.

இதை விளக்குவோம்:

அகவல் எழுத—ஓர் அடிக்கு நான்கு சீர் வேண்டும்.

"திங்கள் எழுந்தது செங்கதிர் மறைந்தது" — என்பது நாற்சீர் வந்த அகவலடி. இது போன்ற அகவலடி எழுதவரும் பாவாணர் "சங்கு ஒலியும் சாறு ஊற்றும்" —என்று எழுதினால் பிழையாகும் ஏன்? இப்படிப் பிரித் தெழுதலாகாதன்றோ?

சங்கு ஒலியும் என்பன சங்கொலியும் என்று தான் புணரும். "சங்கொ" ஈரசைச் சொல்போக மீதி, "லியும்" என்ற ஓரசைச் சொல்லே இருக்கின்றது. ஓரசைச் சொல் அகவலில் வராதன்றோ. அதுபோலவே சாறு ஊற்றும் என்பன சாறூற்றும் எனப்பிரிதலால் றும் ஓரசையாக வந்து அகவலைக் கெடுக்கு மன்றோ!

என்று அவர்தாம் வருவார் எனறு
அரசி நினைந்து அழுதாள்
அரசன் வரக் கண்டு அகமகிழ்ந் தாளே!

என்பது

என்றே அவர்தாம் வருவார் என்றே
அரசி நினைந்தே அழுதாள்
அரசன் வரக்கண் டகமகிழ்ந் தாளே!

என்றுவது திருத்தப்பட்டால் பிழையறும்.

பிசிராந்தையார்...

காட்சி கூ.

இடம்: *பாண்டிய நாட்டில் ஒரு தோப்பு, அது சார்ந்த ஒரு தாமரைக்குளம்.*

நேரம்: *மாலை.*

உறுப்பினர்: *பாண்டிய நாட்டுப் பச்சைக் கிளி, சோழநாட்டுத் தூயோன், சிறுமியர் பலர்.*

காட்சித் தலைப்பு:

நாடகத்துள் நாடகம்

நிகழ்ச்சி: *தாமரைக் குளநோக்கித் தண்ணீர் எடுக்க வந்த சிறுமியர் குடத்தை ஒருபுறம் வைத்துவிட்டுப் பாடி ஆடுகின்றார்கள்.*

பாட்டு

குளிர்-தென்றல் ஓடைதனில் ஆடுவோம்
தென்னவன் சந்தனப் பொதிகையைப் பாடு
[வோம் (தென்றல்)

அன்றன்று மலர்ந்த மலர் மணத்தையும்
அணுஅணு வாகிய தங்கப் பொடியையும்
சென்று சென்று தென்னகம் பரப்பும்
சேயிழைமார் தமையும் மகிழச் செய்யும்
(தென்றல்)

கிளையின் தளிரை மெல்ல அசைக்கும்
கேட்க இனிக்கும் பண்ணும் இசைக்கும்
துளி துளியாக மலர்த்தேன் மாரி
தூவும்! நாமெலாம் அன்புடன் தாவும்
(தென்றல்)

அன்னை தழுவிய செங்கையின் நலமோ
அன்பர் செய்யும் துணையின் நலமோ
பொன்னிறக் கலவைப் பூச்சின் நலமோ
புலவர் கொள்ளும் மகிழ்ச்சி நலமோ
(தென்றல்)

(தொடரும்)

கீரைகள்

★ "சித்தன்" ★

பொன்விளைந்த இந்நாட்டில் புற்றீ சல்போல்
புதுப்புதுநோய் நாடோறும் புகுதல் கண்டோம்!
குன்றெனநற் றேள்படைத்துக் கொடுமை தேய்த்தோர்
குற்றுயிராய் வற்றியுடல் குறுகி நின்றேம்!
இன்றெவரும் விருந்திலேயோ என்றே ஏங்கி
எதிர்பார்த்த நாம்பிறரை எதிர்பார்க் கின்றேம்!
வென்றுநமை நின்றுபுகழ் எய்திற் றிங்கே
விளைவறுமை! நல்லறிவால் அதனை வெல்வோம்!

நல்லுணவுக் குறைவாலே நோய்கள் தோன்ற
நாடோறும் மருத்துவரின் இல்லம் சேர்ந்தோம்!
சொல்லுமவர் சொற்கேட்டுக் கடனை வாங்கிச்
சுமைசுமையாம் மருந்துகளுக் கழுது நின்றேம்!
கொல்லையிலே மருந்திருக்க அதனை விட்டுக்
குற்றுலத் தருவியினில் குளிக்கச் சென்றேம்!
நல்லபல கீரைகளை எளிதில் கொண்டே
நாம்பெறலாம் உயிர்ச்சத்து; மருந்தே வேண்டாம்!

பொன்னிறமாய் உடலாக்கும் பொன்னுங் கண்ணி;
புதியஒளிக் கண்ணருளும்; மூலம் போக்கும்;
நன்மேனிச் சூட்டினையோர் ஒழுங்கில் வைக்கும்!
நல்லதொரு வல்லாரை நமக்கு வாய்த்த
இன்னமுதாம்; தொழுநோய்க்கோர் ஈட்டி; வீக்கம்,
எயிற்றுப்புண்; மேகம்போம்; நினைவு வன்மை
பொன்னுகும்; மூளைநோய் அனைத்தும் போமே;
புகல்பலநோய் போக்குமிதைப் போற்றி யுண்போம்!

வள்ளையுணத் தாயர்க்கு மிகும்பால்; மேனி
வனப்பாகும்; அறிவுமிகும்; குடல்சீ ராகும்!
ஒள்ளியகா சரையுண்ண ஓங்கும் ஆண்மை!
உயர்பண்ணை குடல்காக்கும்! கோழிக் கீரை
தள்; அதனுல் புடை, கரப்பான், கிருமி உண்டாம்!
தரும்குருதி காசினியைத் தேடி யுண்க:
கொள், அகத்திக் கீரையினைப் பித்த ருகாய்!
கொத்துமல்லிக் கீரையினுல் தாதுண் டாமே!

(தொடரும்)

தலைகீழ் பாடம்

விவசாயிகளே! அரசாங்கம் நிலத்தைப் பிடுங்கிவிடுமோ என்று பயப்படாதீர்...!

நம்நாட்டில் உள்ள நூற்றுக்குத் தொண்ணூறு விவசாயிகளுக்கு அளவுக்கு அதிகமான நிலம் கிடையாது...

கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்...

மலையாளத்துக்கு அரிசி ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறேம்....

மந்திரி பக்தவத்சலம் ஒப்பித்த தலைகீழ் பாடந்தான்; இது கோவை விவசாயிகள் மாநாட்டில்!

திருச்சி திருமகள் விலாச அரிசி ஆலையில்,

தந்தை பெரியார்

பிறந்தநாள் விழா!

தந்தை பெரியார் அவர்களின் 80-வது ஆண்டு விழாச் சிறப்பு நிகழ்ச்சியாக வருகிற செப்டம்பர் 20, 21 தேதிகளில் கவிஞர் பாரதிதாசனார் கவிதைப் பாடல் போட்டியும் பரிசளிப்பும், அன்பர்களின் சொற்பொழிவு களும் இதர கலை நிகழ்ச்சிகளும் அமைய இரண்டு நாட்களும் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கவிதை பாடும் போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ள யாவருக்கும் அவரவர்களுடைய பெயர்கள் பதிவுசெய்யப் பட்டுள்ளனவென்பதைத் தெரிவித்துக்கொள் வதுடன் கவிஞர் அவர்களே விழாவுக்குத் தலைமைதாங்கி நடத்திக்கொடுக்க இசைந் துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுமக்களும் திரளாக வந்திருந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சே. மு. அ. பாலசுப்ரமணியம்,
திருமகள் விலாச அரிசி ஆலை,
பாலக்கரை, திருச்சி.

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு:

முழுப்பக்கத்திற்கு ரூ. 100
அரைப்பக்கத்திற்கு ரூ. 50
கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

—அமைச்சர்.

இடமில்லை பேரேட்டில்!

இராங்கியம் — எழில் வழுதி.

தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ்நாட் டார்க்கும்
தன்மான உணர்ச்சியினை ஊட்டு கின்ற
அமிழ்துக்கு நிகர்வேந்தர் பெரியார் தம்மின்
ஆணையினைச் செயல்படுத்தும் போதும், அந்நாள்
தமிழுக்குப் பிறநாட்டார் உயர்வு தந்த
தகவெண்ணி மகிழ்கின்ற போதும், துன்பம்
இமைதாழ்த்தி நோக்கிடினும் இடமிங் கில்லை,
என்னுளத்தில் தமிழ்முழுதும் நிறைந்த தாலே!

நிலைமறக்கச் செய்திடும்நல் அருவி யோரம்;
நீலத்தைச் சிவப்பாக்கி வானம் அன்புக்
கலைமதியின் வரவுபார்த் திருக்கும் நேரம்!
காதலியோ டோடி மகிழ்ந்தே கூடி
நிலைமறக்கும் வேளையிலே துன்பப் பெண்ணே
நேசத்துக் கரம்நீட்டி நெருங்கி வந்தாய்!
அலைந்திடுமோ என்னெஞ்சம்? வேற்றுள் [பார்ப்பாய்!
அவளென்றன் அருகில்! உன் ஆற்றல் எங்கே?

வளர்ந்துவரும் தமிழ்ப்பெருமை நினைக்கும் போதும்,
வளமுடைய இலக்கியங்கள் பயிலும் போதும்,
கிளர்ந்தெழுந்த உணர்ச்சியினைக் கவிதை யாக்கிக்
கட்டுரையாய்ச் சிறுகதையாய் ஆக்கு வித்தே
உளம்நிறையச் செய்கின்ற போதும் நண்பர்
உண்மையுடன் கேலிமொழி பேசும் போதும்,
வளைந்துவந்து வணங்குகின்ற துன்பே உன்றன்
வரவுரைக்க இடமில்லை என்பே ரேட்டில்!

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50,
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து காசு) தபால் தலைகள் அனுப்புக.

தமிழர் அன்றும் இன்றும்!

பட்டுக்கோட்டை, இராசேந்திரன்.

எந்தமிழ் மக்கள் முன்னர்
இன்புற வாழ்ந்தார்; அன்னைச்
செந்தமிழ் காத்தார்; நாட்டைச்
செழிப்புற ஆண்டார்; நாடி
வந்தவர்க் கெல்லாம் வாரி
வழங்கினர் பொருளை; ஒன்னர்
தந்தனர் தத்தம் நாட்டைத்
தென்னவர் திறனுக் கஞ்சி!

தமிழர்தம் திறனைக் காட்டத்
திரைகடல் தாண்டி, அங்கும்
தமிழர்தம் கொடியை நாட்டித்
தமிழ்தனை முதலாய்க் கொண்டித்
தமிழகம் ஆண்டார்; செங்குத்
திமயமும் கொண்டார்; அன்னைத்
தமிழ்தனை இகழ்வார் அன்னர்
தடவாளுக் கிரையே ஆவார்!

ஒன்னர் - பகைவர்

★ ★ ★

அன்னைநந் தமிழி ருக்க
அறிவிலார்: தமிழர் சில்லோர்;
இன்னொரு வேசி யைப்போய்
"என்னருந் தாயே" என்பார்;
இங்கிலை காண்பார் வந்த
இரண்டுநாக் குடையார்; "ஆகா
நங்கிலை இதுதான்" என்றே
நரியினச் செயலைச் செய்வார்!

தெருவெலாம் தமிழர் கூட்டம்
தேம்பிடும் வறுமைக் கஞ்சிப்
பெரும்பொரு ளுடையா ரீதைப்
பார்த்திடார்; பதிலும் பேசார்!
உருவினில் பெருந்தூண் தேய்ந்தே
ஒருதுரும் பாதல் போலென்
அருந்தமிழ் மக்கள் ஆனர்:
அவர்துயர் களைவா ரில்லை!

இருந்தாலென் போனாலென்?

—: : எஸ். டி. விவேகி : :—

கடவுளையே சிறிதளவுங் காண வில்லை
கண்டவருங் கிடையாது கண்டோ மென்று
திடமுரைக்கும் பெரியவரும் கடவு ளோடு
சேர்ந்திருந்து வாழ்ந்தாலும் கவலை இல்லை
கடவுளுமப் பெரியவரு மிங்கு வந்து
கவலைபுரி மக்களது குறையை நீக்கி
விடமுயற்சி செய்வாரேல் மேன்மை யுண்டு
வீணாகத் தேவையென்றால் தேவை யில்லை!

பொருவரிய கடவுளெங்கும் பூரணமாய்
இருப்பரெனப் புகன்ற நூல்பொய்
கருவிலுரு வாகியறி வறிந்தமக்கள்
வருந்தவுமே காலந் தேராத்
துருவிருந்த மனமுடர் சுகம்பெறவுஞ்
செய்திடுநஞ் சுண்ணிச் சாமி
அருவுருவாய் இருந்தாலென் போனாலென்
மாண்டாலென் அறைகு வீரே!

கோதை நடந்தாளே!

— கோவை. சபாபதி —

ஒளிதரு மணியணி ஒருபுற மசைவுற
உண்டிலை என்றேதும்
ஓசிதரு மிடையொடும் ஒயில்பெரு நடையொடும்
உற்ற நலத்தோடும்
களிதரு மிருவிழி கனியொடு மொருமொழி
கச்சு வடத்தோடும்,
கனதன மசைவுறக் கருமுகில் மிசையுறக்
கற்பனை ஒப்பனையும்,
முளிதயிர் சிதறிய துளிகளை நிகர்தரு
முத்து நகையோடும்
முழுநில வயர்வுறும் முனிவரும் மயலுறும்
மோன முகத்தோடும்
குளிர்தரு மழையெனக் கொடிதரு மலரெனக்
கோல மிகுந்தாடும்
குறுநடை மயிலெனச் சிறுநடை யனமெனக்
கோதை நடந்தாளே!

தாழ்ந்த நிலையில் தமிழகம்

(ப. சு. வே.)

மாலைப் பொழுது மணிஆ றிருக்கும்
சோலைக்குச் சென்றேன் சுற்றிப் பார்க்க!
தென்றல் காற்றுச் சில்லென வீசிற்றே
புன்னகை தவழ்ந்து பூங்கா விளங்கிற்று.

ஆங்குநா னமர்ந்தே னயர்வு போக்க
இரண்டு குருவிகள் இன்னிசைப் பாட்டுடன்
மரக்கிளை யொன்றில் மகிழ்வுட் விருந்தன.

அவற்றைக் கண்டுநா னுவகையோ டிருக்க
என்னைப் பார்த்தி ரண்டும் பேசின;
"இன்னுயிர்த் தலைவ! இன்பப் பொழுதில்
உன்னையு மென்னையு முற்று நோக்கு
மின்னவன் யாரென இயம்பிட வேண்டும்"
என்று பெட்டை, ஆணைக் கேட்டது.

"மன்னுயிர் வாழும் மாநில மதனில்
இன்னவன் பிறப்பி லுயர்(வு) இருந்தென்?
சுதந்திர எண்ணம் தோன்றா நிலையில்,
வதையுறும் அடிமை வாழ்வை யேற்று,
நம்மினுங் கடையாய் நாட்டில் வாழ்கிறான்.
நம்வாழ்வு நாகரிக முடைய தாகும்;
அவனது வாழ்க்கை அப்படிக் கில்லை.

ஆததமில் வைதிக ஆணவ மின்னும்,
பொருளிலா முறையில் போதிக்கக் கற்று,
உண்மைப் பொருளை உணரா நிலையில்
மண்ணில் மரத்தூண் மாதிரி வாழ்கிறான்.
சாதிக்குச் சாதித் தனித்தனிக் கடவுள்
வீதிக்கு வீதி விரோதக் கொள்கை

இத்தனை யுங்கொண் டிடருற்று வாழ்வில்
பித்தனைப் போலப் பிதற்றி வாழ்கிறான்

பெண்ணடிமை போற்றும் பிழைகொள் அவனது
கண்ணில் சமூகம் கதைகளைச் சொல்லிப்
பேதமை கொண்டது பெண்ணுல கென்று
வாதமும் புரியும் வரட்டுத் தவளையாய்!
காதல் என்னும் கரையிலா வாழ்வைச்
சாதல் வாழ்வெனச் சாத்திரஞ் சொல்லும்
என்றதாண் குருவி எழில்மிகு பெட்டைக்கு
இன்றைய உலகம் இப்படித் தானே
என்றுநான் எனக்குள் ளேயே மெதுவாய்ச்
சொல்லி, உடைந்த உளமோ
டில்லம் நோக்கி ஏகி னேனே!

★

கலைஞன் கண்ட வெற்றி.

வித்துவான். பா. முத்து

கண்பறிக்கும் ஓவியங்கள் வல்லான்; அந்தக்
கலைநுட்பம் வல்லாரும் போற்று கின்ற
விண்பறித்த பிறைனெத்தான்; ஓவம் தீட்டி
வேந்திருக்கும் அவைநடுவே எடுத்து வைத்தான்;
மண்பறிக்கும் பேரொன்றே மனத்தில் எண்ணும்
மன்னனவன்; கடுகுள்ளம் படைத்தோன்; "நல்ல
பண்பிருக்கும் ஓவியங்கள் கொணர்க! அன்றே
பரிசுனக்காம்! இதுவேண்டாம்! வேண்டாம்!"
[என்றான்.

எண்ணத்தை எழிற்கலையில் தோய்த்தெ டுத்தான்;
இரண்டுநாள் ஊணில்லை; உறக்கம் இல்லை;
வண்ணத்துச் சித்திரங்கள் தீட்டித் தீட்டி
வகைக்கொன்றாய் வைத்துவிட்டான்; பாவை
யொத்தாள்
கிண்ணத்தில் பாலமுதைப் பழத்தைச் சேர்த்துக்
கிளிக்கூட்டும் உருவொன்றே போது மேனும்
மண்ணத்தைக் காக்கின்ற மன்னன் கண்டே
மறுமுறையும் முயல்கவெனத் திருப்பி விட்டான்.

ஓவியன்யான் என்திறத்தை உணர்வைக் கொட்டி
உளமுறுக்கும் கலைசமைத்து வைத்தேன்; என்றன்
ஆவியன்ன உயர்கலைக்குக் களங்கம் சொன்னான்;
அவனுமொரு மன்னவனோ? திரையில் அன்னத்
தூவியன்ன மெல்லடியாா் ஓவம் கண்டும்
தோயவில்லை அவனுள்ளம்; புலவர் தந்த
காவியத்தை ஓவியத்தில் தீட்டி யுள்ளேன்
கருத்ததிலே அவன்சிறிதும் செலுத்த வில்லை;

தலைசிறந்த மக்களென எண்ணிக் கொண்டு
தமக்கேதோ தெரிந்ததுபோல் தலையை ஆட்டிக்
கலைசிறந்த தென்கின்றார்; கலையைக் கண்டால்
கருத்துரைக்க மறுக்கின்றார்; கலைஞன் செல்வ
நிலைசிறந்த தென்றாலோ அவனின் வீட்டு
நீள்சுவரின் ஓட்டையுமோர் கலையே என்பர்;
கொலைசிறந்த தெனுமிந்தக் கொடியர் நாட்டின்
கொலைஞர்களே!" என அந்தக் கலைஞன் நைந்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

★

மீதூண் விரும்பேல்

புதுவை, வித்துவான், வை. மாணிக்கசாமி.

விட்டில் பலகாரம் சுட்டுத் — தாய்
விரும்பித் தருமுன்னே கிட்டு
நாட்டம் எலாம்அதில் போக்கி — அவள்
நகரும் சமயத்தை நோக்கிச்

சுட்ட பலகாரம் கண்டு — சில
தூக்கிக் கொண்டோடுவான் மண்டு
கெட்ட குணம்இத னாலே — பெருங்
கேடும் வந்ததுபின் னாலே.

பாட்டியும் நோய்வயப் பட்டார் — அவர்
படுத்த படுக்கையாய் விட்டார்
வீட்டு மருத்துவர் வந்தார் — அவர்
வேண்டும் மருந்துகள் தந்தார்

பாதி மருந்தினைத் தந்து — தந்தை
போனதும் கிட்டுதான் வந்து
மீதி மருந்தினைத் தொட்டான் — அதை
மோப்பம் அவன்பிடித் திட்டான்

சர்க்கரை என்றதைக் கொண்டு — வாயில்
சட்டெனப் போட்டதும் உண்டு.
பக்கம் எலாம்வயி றூதி — அன்று
பன்முறை ஆயிற்றே பேதி.

தந்தை யிடத்தவன் சொல்லத் — தன்
தாயி னிடத்திலும் சொல்ல
அந்த மருத்துவர்க் காளை — அவர்
அனுப்பியே வைத்தாரவ் வேளை.

தந்த மருந்தினைத் தின்றே — அவன்
தப்பிப் பிழைத்தானே அன்றே
இந்தக் கதையினை நம்பி — நீயும்
ஏற்றவா றொழுகிடு தம்பி.

* *

என்று செயல் படுவாய்?

- முருகு. சுந்தரம் -

நெஞ்சங் குமுறுதடா! - நமது
நாட்டினை நற்றமிழை
வஞ்சகர் சூழ்ச்சியினால் - வீழ்த்தி
வாழ்வதைச் சொல்வோமென்றால்!

கொஞ்சுந் தமிழ்க்கிளியைக் - கொல்லக்
கோட்டானும் 'இந்தி'யுடன்
கொஞ்சிக் குலவச்சொல்லும் - கொடுங்
கோன்மையின் கூத்தினைப்பார்!

நேற்றை மொழிகளெல்லாம் - தன்பேரில்
நாட்டைப்பெற் றுள்ளதடா!
ஏற்றமிகு தமிழ்க்கே - இன்னும்
ஏன்'தமிழ் நாடெ'ன்றில்லை?

அண்டை நிலங்களைப்பார் - ஆங்கே
உண்டோ வறுமையின்பேர்? - முந்நாள்
அண்டத்திற்கே யளித்தாள் - தமிழ்
அன்னையின்றேன் இளைத்தாள்?

நாளுக்கு நாள்வடவர் - ஆட்சி
நம்மை நசுக்குவதால் - ஓர்
நாளைக் குறித்திடடா - நமது
நாட்டினை மீட்பதல்லால்...

எத்தனை நாள்பொறுப்பாய் - தில்லி
எத்தரின் கீழ்இருப்பாய்?
இத்துடன் கட்டறுப்பாய் - அதற்
கென்று செயல்படுவாய்?

*

குயிலுக்கு...

பின் கண்ட ஊர்களில்
விற்பனையாளர்கள் தேவை.

செங்கற்பட்டு, மதுராந்தகம்,
தாம்பரம், செஞ்சி,
விழுப்புரம், பண்ணுருட்டி,
திருக்கோவிலூர், கோவில்பட்டி,
காரைக்குடி, குடியாத்தம்,
தென்காசி, விருதுநகர்.

குயில்

Regd. No. M. 7030

பறந்துவந்த கிளியே

பறந்து வந்த கிளியே!
திறந்தஎன் மனக்கூடு புகுவாய்
பறந்து வந்த கிளியே!

பிறந்த பெண்கள் பல கோடி-உன்போல்
பெண்ணொருத்தி தேடி-நான்
இறந்துபோகுமுன் ஓடி-மிக
எழில் சுமந்தபடி என்னை நாடிப்
பறந்து வந்த கிளியே!

பெற்றெடுத்த ஒரு பொன்னை-மண்மேல்
பிரிந்த தென்ன அன்னை
கற்றுணர்ந்த என்னை-நீ
கண்டதில்லை எனிலும் என் முன்னே
பறந்து வந்த கிளியே!

இலங்கை தனில்இருந் தாயா?-அவர்செய்
இழிவு கண்டுநைந் தாயா-நீ
கலங்கி இங்குவந் தாயா-என்
கைகள் என்னைக் காவாத தீயா
பறந்து வந்த கிளியே!

உள்ள குறைகள்நான் தீர்ப்பேன்-தமிழ்
உலகை மீட்டுக் காப்பேன்
தெள்ளு தமிழர் எங்கிருந் தாலும்-அவர்க்குத்
தீமை செய்வாரை ஒருகை பார்ப்பேன்.
பறந்து வந்த கிளியே!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: **பாரதிதாசன்** புதுச்சேரி.
அச்சிடுவோர்: **மா. தண்டபாணி,** பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.